

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பன்னாட்டு விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க மற்றும் விளையாட்டு உபகரணங்களை வாங்க 17 வீரர், வீராங்கனைகளுக்கு ”TN Champions Foundation அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ. 56.55 லட்சத்திற்கான காசோலையினை வழங்கி குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு ஆரம்பப் பள்ளிகளில் 3 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் ஓடி விளையாடு உடற்கல்வி திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 8 லட்சத்திற்கான காசோலையினை ஓடி விளையாடு பல்நோக்கு பயிற்சி மைய நிர்வாகத்திடம் ”TN Champions Foundation அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மாவட்ட வருவாய் அலுவலர் வே. மணிகண்டன் ஆகியோர் உடனிருந்தனர்.

### ‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’ நிதியிலிருந்து

# விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.64.55 லட்சம்!

## காசோலையினை - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மார்ச் 13-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ. 64.55 லட்சத்திற்கான காசோலையினை விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2024ம் ஆண்டு ஸ்பெயினில் நடைபெறவுள்ள உலக பல்கலைக்கழக கைப்பந்து போட்டியில் கலந்து கொள்ள உள்ள நான்கு விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு தலா ரூ.3.09 லட்சத்திற்கான காசோலையினையும் ஆசிய தகுதிப் போட்டியில் பங்கேற்கவுள்ள எ.லின்சியாவிற்கு ரூ.2.20 லட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

மேலும் பல்வேறு பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவுள்ள 7 பாரா விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பாரா விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ. 36.69 லட்சத்திற்கான காசோலையினையும் மற்றும் பாராஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள சதாம் ஹுசைனிற்கு ரூ. 2.20 லட்சத்திற்கான காசோலையினையும் வழங்கினார்.

இரண்டு விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக தலா ரூ.70,000 மதிப்பிலான காசோலை - பன்னாட்டு விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க 2 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ. 1.70 லட்சத்திற்கான காசோலை என மொத்தம் 17 விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு ரூ.56.55 லட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

மேலும் அரசு ஆரம்பப் பள்ளிகளில் 3 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் ஓடி விளையாடு உடற்கல்வித் திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 8 லட்சத்திற்கான காசோலையினை ஓடி விளையாடு பல்நோக்கு பயிற்சி மைய நிர்வாகத்திடம் “TN Champions Foundation“ அறக்கட்டளை நிதியிலிருந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மணலி மண்டலத்தில்

# ரூ.238.52 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணி!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை,மார்ச்.13-

சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.238.52 கோடி மதிப்பீட்டில் மணலி மண்டலம், வார்டு - 15 இடையன்சாவடி, வார்டு - 16, சடையன்குப்பம் மற்றும் காடப்பாக்கம் பகுதிகளில் கழிவுநீர்க் குழாய் பதிக்கும் பணிகள் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் 08.03.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

அதனடிப்படையில், மேற்கண்ட பகுதிகளில் 72.77 கி.மீ நீளத்திற்கு 250 மி.மீ முதல் 500 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் குழாய்கள் மற்றும் 22.65 கி.மீ. நீளத்திற்கு 150 மி.மீ முதல் 700 மி.மீ. விட்டமுடைய கழிவுநீர் விசைக் குழாய்கள் பதிக்கும் பணிகள் 10.03.2024 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2921 எண்ணிக்கையிலான இயந்திர நுழைவாயில்கள், 3 துணை உந்து நிலையங்கள், 8 சாலையோர உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு நாளொன்றுக்கு 5.61 மில்லியன் லிட்டர் கழிவுநீர் கொடுங்கையூர் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு சுத்திகரிக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம், இடையன்சாவடி, சடையன்குப்பம் மற்றும் காடப்பாக்கம் பகுதிகளில் உள்ள 262 தெருக்களில் 4000 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு 46,730 பொதுமக்கள் பயன் பெறுவர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னை மே தினப் பூங்கா

# விளையாட்டு மைதானத்தை மேம்படுத்த பணிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்தார்!

சென்னை, மார்ச் 13-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழி காட்டுதலின்படி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.03.2024) சென்னை, சிந்தாரிப்பேட்டை, மே தின பூங்காவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மே தின பூங்கா விளையாட்டு மைதானத்தை மேம்படுத்துவதற்காக அடிக்கல் நாட்டி பணிகளைத் துவக்கி வைத்தார்.

சென்னை, சிந்தாதிரிபேட்டையில் 3.73 ஏக்கர் பரப்பளவு கொண்ட மே தின பூங்கா விளையாட்டு மைதானத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உடற்பயிற்சி மற்றும் பொழுதுபோக்கிற்காக மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.

மேலும் சிந்தாதிரிபேட்டை மே தின பூங்கா அருகிலுள்ள பள்ளிகள் மற்றும் உள்ளூர் சமூகத்தை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டு, பல்வேறு நவீன விளையாட்டு வசதிகளை வழங்குகிறது. இவ்விளையாட்டு மைதானமானது, தனிநபர்கள் மற்றும் சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதோடு சமூக ஒருங்கிணைப்பை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்விளையாட்டு மைதானத்தில் இரண்டு பூப்பந்து உள்விளையாட்டு அரங்கம், 100 பார்வையாளர்கள் அமர்வதற்கான இருக்கைகளுடன் கூடிய சறுக்கு வளையம், 50 முதல் 75 வரை பார்வையாளர்கள் அமர்வதற்கு ஏற்ற குத்துச்சண்டை வளையம், பொழுதுபோக்கு மற்றும் இருக்கைகளுடன் கூடிய பசுமை பகுதிகள், 6 வலை பந்தாட்ட மைதானம், அனைத்து வயதினருக்கான நடைப்பயிற்சி மற்றும் ஓடுதள பாதைகள், கிரிக்கெட் மற்றும் கால்பந்து போன்ற பல்வேறு விளையாட்டுகளுக்கான மைதானம் மற்றும் பயிற்சி நோக்கத்திற்காக 3 பயிற்சி வலைகள் ஆகியவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், வாகனங்கள் நிறுத்துமிடம், குடிநீர், கழிப்பறைகள் மற்றும் இதர அத்தியாவசிய வசதிகளை கொண்ட மைதானமாக அமையவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா ராஜன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, மாநகராட்சி நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக் குழுத்தலைவர்கள் எஸ்.மதன்மோகன், ப.ஸ்ரீராமலு, சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்புப் பொறியாளர் ராஜ மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் ரா.ஜெகதீசன், அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


